இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 03.11.2026

அரசு வேலையே இனி அவ்வளவு தானா?

ஏதாவது ஒரு மோசடித்தனம் செய்வது, அதை மறைக்க ஏதாவது ஒரு பசப்புச் செய்தியை வெளியிடுவது இதுதான் விஜய் அரசின் பாணியாகும்!

அரசு துறைகளில் ஒப்பந்த முறையில் பணி நியமனம் செய்யப் போகிறது விஜய் அரசு. அதை மறைக்க, 'அரசுப் பணிக்கான வயது வரம்பு மேலும் 5 ஆண்டுகள் நீடிப்பு' என்ற வாய்ஜாலம் காட்டி இருக்கிறார் முதலமைச்சர் விஜய்.

போட்டித் தேர்வாளர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டாராம் விஜய். அதனால் குரூப் 1,2,4 ஆகிய தேர்வுகளில் பங்கெடுப்பவர்களின் வயது வரம்பை அதிகரித்துள்ளாராம். அரசுப் பணிக்கே ஆள் எடுக்கப் போவது இல்லை. பிறகு ஏன் வயது வரம்பை அதிகரிக்க வேண்டும்? 32 வயது வரை மட்டும் காத்திருக்காதே, 37 வயது வரை காத்திருந்து ஏமாந்து போ என்கிறாரா விஜய்?

அரசுத் துறைகளில் ஒப்பந்த முறையில் பணி நியமனம் என்ற செய்திக்கு பின்னால், வயது வரம்பு உயர்வு என்ற செய்தியும் வருகிறது என்றால் இதை விட பித்தலாட்டம் இருக்க முடியுமா?

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசுத்துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அதேபோன்ற பிற துறைகளுக்கு தேவைப்படும் பணியாளர்களை அவுட்சோர்சிங் முறையில் வழங்குவதற்கான நிறுவனமாக தமிழக அரசின் வெளிநாட்டு மனிதவளக் கார்ப்பரேஷனை நியமித்து ஆளுநர் ஆணையிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடைநிலைப் பணியாளர்கள், நகல் எந்திரத்தை இயக்குபவர், தட்டச்சர், இளநிலை உதவியாளர், ஓட்டுநர், உதவியாளர், அலுவலக கண்காணிப்பாளர், அலுவலக மேலாளர் உள்ளிட்ட பணியிடங்களுக்கு நிரந்தரப் பணியாளர்கள் நியமிக்கப்படும் வழக்கம் கைவிடப்பட்டு, அந்தப் பணிகளுக்கு மிகக்குறைந்த ஊதியத்தில் அவுட்சோர்சிங் பணியாளர்கள் நியமிக்கப்பட இருப்பது இதன்மூலம் தெரிகிறது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (OMCL) மூலம் அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு ஒப்பந்த பணியாளர்களை நியமிக்க த.வெ.க. அரசு முடிவெடுத்து இருப்பது ஒட்டுமொத்த தமிழ்நாட்டு இளைய சமுதாயத்தின், மாணவர் சமுதாயத்தின் தலையில் பாறாங்கல்லைப் போடுவது ஆகும்.

அரசு வேலைக்காக கனவுகளோடு படித்து வரும் லட்சக்கணக்கான இளைஞர்களை, தேர்வு எழுதி வரும் இளையசமுதாயத்தை, அவர்களது வாழ்க்கையைச் சிதைக்கும் செயலைத் தான் முதலமைச்சர் விஜய் செய்துள்ளார்.

நிரந்தரப் பணி அல்லாமல், ஒப்பந்த முறையில் பணிகளை வழங்குவதால் அரசுப் பணி என்ற மரியாதையும் போய்விடும். ஊழியர்களின் பணி உரிமையும் பறிபோய்விடும். பணிப்பாதுகாப்பு போய்விடும். காலம் காலமாக நாம் போற்றிப் பாதுகாத்து வந்த சமூகநீதி அளவுகோல் முற்றிலுமாக பாதிக்கப்படும்.

காலம் காலமாக நாம் வளர்த்தெடுத்து வரும் தேர்வு வாரியங்கள் காலப் போக்கில் செயல் இழந்துவிடும்.

அரசுப் பணிகளில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தற்காலிகப் பணியாளர்கள் 5 வருடப் பணி அனுபவம் பெற்றதும், நிரந்தரமாக்கப்படுவர் என வாக்குறுதி கொடுத்தாரே விஜய். அது என்ன ஆனது?

5 வருட பணி அனுபவம் பெற்றவர்கள், நிரந்தரமாக்கப்படுவர் என தேர்தல் வாக்குறுதியில் சொன்னதை நிறைவேற்றினாரா விஜய்? அது தொடர்பாக ஏதாவது அறிவிப்பு இதுவரை வெளியானதா? இல்லை. இது எதையும் செய்யாமல் வயது வரம்பை மட்டுமே உயர்த்துவதால் என்ன பயன்?

புதிதாக எத்தனை பேருக்கு அரசு வேலை தரப்போகிறோம் என்று சொன்னால் விஜய் அரசைப் பாராட்டலாம். அப்படி அவர் ஏதாவது சொன்னாரா என்றால் இல்லை.

இதைத் தான் அரசு ஊழியர் அமைப்புகளும் மிகச் சரியாகச் சொல்லி இருக்கின்றன. ஜாக்டோ ஜியோ மிகக்கடுமையாக இதனை எதிர்த்துள்ளது. அடிப்படைப் பணியாளர்களை முற்றிலுமாக ஒழிக்கும் செயல் என்று சொல்லி இருக்கிறது இந்த அமைப்பு.

"வயது வரம்பை உயர்த்துவதால் பெரிய அளவில் மாற்றம் வந்து விடாது. அரசு துறைகளில் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட காலியிடங்கள் இருக்கின்றன. ஆனால் அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக 5-10ஆயிரங்கள்என்றஅளவில்தான்காலிஇடங்கள்நிரப்பப்படுகின்றன. அதிகப்படியான இடங்களை நிரப்ப அரசு முன்வர வேண்டும்" என்று தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத் தலைவர் த.அமிர்த குமார் கூறி இருக்கிறார். " அரசு துறைகளில் 5 லட்சம் காலிப் பணியிடங்கள் இருக்கும் போது அவற்றை நிரப்பாமல் வெறுமனே வயது வரம்பை அதிகரிப்பதால் என்ன பயன்? குரூப் சி, குரூப் டி பணி இடங்களை அவுட் சோர்சிங் மூலம் நியமிக்க அரசு முயற்சி செய்வது எந்த வகையில் நியாயம்?" என்று கேட்டுள்ளார் தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கத்தின் தலைவர் கு.வெங்கடேசன்.

'வயது வரம்பு உயர்வால் ஆயிரக்கணக்கான போட்டித் தேர்வர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்' என்கிறது அரசாங்கத்தின் அறிக்கை. அதிகப்படியான வேலைக்கு பணியாளர்களை எடுத்தால் தான் போட்டித் தேர்வர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். பணியாளர்களை எடுக்காமல், வயது வரம்பை உயர்த்துவதால் எந்த லாபமும் இல்லை.

அவுட்சோர்சிங் மூலமாக அரசுப் பணிக்கு ஆட்களை எடுப்பது அரசு வேலை என்ற கனவையே சிதைக்கும் முயற்சியாகத்தான் முடியும்.

●●

சிறைவாசிகளால் நடத்தப்படும் பெட்ரோல் நிலையங்களை மூடிவிட்டு

தனியாரிடம் கமிஷன் டீல் பேசுகிறாரா அமைச்சர் 'கலைக்சன்' குமார்?

சட்டத் துறை முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

சென்னை, நவ. 3 -

சிறைவாசிகளால் நடத்தப்படும் பெட்ரோல் நிலையங்களை மூடிவிட்டு தனியாரிடம் கமிஷன் டீல் பேசுகிறாரா அமைச்சர் கலைக்சன் குமார்? சந்தி சிரிக்கும் சட்டம் - ஒழுங்கை ஒழுங்கு படுத்த காவல்துறையை பயன்படுத்தாமல், பந்தோபஸ்துக்கும் இனிப்பு வழங்குவதை தடுப்பதற்கும் பயன்படுத்தினால் கொலை களும் - கொள்ளைகளும் பெருகாமல் என்ன செய்யும்? என்று சட்டத்துறை முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து சட்டம், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

2021 - 2026 திராவிட மாடல் ஆட்சியில் இந்தியாவிலேயே சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறை தமிழ்நாட்டில்தான் சிறப்பாகச் செயல்படும் துறையாக முதலிடம் பெற்றுத் திகழ்ந்தது. சிறைச்சாலைகள் வெறும் தண்டனைக் கூடங்களாக மட்டுமின்றி, கைதிகள் திருந்தி வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திடவும், அங்கு இருக்கக்கூடிய தண்டனை சிறைவாசிகள் தங்கள் குடும்பத்தை காப்பாற்றிக் கொள்வதற்கு பொருளாதாரத்தை ஈட்டுவதற்கும் பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

கைதிகளால் நடத்தப்படும் சில்லறை பெட்ரோல் விற்பனை நிலையங்கள்!

அந்த வகையில்தான் கைதிகளால் நடத்தப்படும் சில்லறை பெட்ரோல் வணிக விற்பனை நிலையங்களும் சிறைத்துறை யால் செயல்படுத்தப்பட்டன. சிறையில் தயாரிக்கப்படும் பொருட்களை விற்பதற்கு 'பிரிசன் பஜார்' என்கிற விற்பனை நிலையங்களும் சிறைத்துறை நிர்வாகத்தால் உருவாக்கப்பட்டன.

சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறை மூலம் ஒரு சிறைவாசி மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 7 ஆயிரத்து 500 ரூபாய் முதல் 12000 வரை வருமானம் ஈட்டி தன்னுடைய குடும்பத்திற்கு அனுப்பக்கூடிய ஒரு சூழ்நிலை உருவானது. குடும்பத் தலைவன் சிறையில் இருந்தாலும் அந்தக் குடும்பம் பொருளாதாரத்தில் பாதிக்கப்படாதபடி சிறைத்துறை நிர்வாகம் தந்த வேலை வாய்ப்புகள் மூலமாக அவர்கள் வருவாயை ஈட்டி தங்கள் குடும்பத்தை காப்பாற்றுவதற்கு வசதியாக அது அமைந்தது.



கோடிக்கணக்கில் லாபத்தை ஈட்டிய பெட்ரோல் நிலையங்கள்!

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் நடைபெற்ற விற்பனை நிலையங்கள் தமிழகத்திலேயே மிகச்சிறந்தவை யாக கோடிக்கணக்கான ரூபாய் லாபத்தை ஈட்டி தருகின்ற விற்பனை நிலையங்களாக விளங்கின. பெட்ரோல் நிலையங்கள் ஆண்டுக்கு சுமார் 13 கோடி ரூபாயும், 'பிரிசன் பஜார்' ஆண்டுதோறும் வருவாய் ஈட்டி தமிழக அரசு மற்றும் சிறைத் துறை நிர்வாகத்திற்கும் சிறைவாசிகளுக்கும் நல்ல வருவாயை உருவாக்கித் தந்தன.

சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறை சார்பில் நடைபெற்ற விற்பனை நிலையங்கள் மற்ற தனியார் நடத்துகின்ற பெட்ரோல் விற்பனை நிலையங்களுக்கு போட்டியாக, வசூலிலும், வருவாயிலும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டன. இதெல்லாம் இன்றைய சிறைத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமாரின் கண்ணை உறுத்தியிருக்கிறது.

இன்றைக்கு தமிழக வெற்றிக் கழக ஆட்சியில் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை மூலம் நடைபெற்று வருகின்ற பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்களை தனியாருக்கு தாரை வார்ப்பதற்கு ஒரு முயற்சி நடப்பதாக தகவல் கசிந்து இருக்கிறது. அதன் முதல் கட்டமாக தமிழகத்தில் மத்திய சிறை சாலைகள் மூலமாக நடத்தப்பட்ட பெட்ரோல் விற்பனை நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு இருக்கிறது. அங்கே இறைச்சி மற்றும் சிறைத்துறை மூலம் தயாரிக்கப்பட்ட பொருட்கள் விற்கப்பட விற்பனை நிலையமும் மூடப்பட்டி ருக்கிறது.

தனியாருக்கு தாரை வார்த்து 'கமிஷன்' பெற முயற்சி!

இதைத் தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்றாக மற்றவற்றையும் மூடி கடைசியாக அவற்றையெல்லாம் தனியாருக்கு தாரை வாக்கின்ற அந்த மகத்துவமான பணியை செய்யப் போகிற அரசாக த.வெ.க அரசு இருக்கப்போகிறது. எனவே மக்களுக்கு கிடைக்க வேண்டிய வருவாயை தனியாருக்கு தாரைவார்த்து அதில் கமிஷன் அடிப்பதில் ஒரு கணக்கு ஓடிக் கொண்டிருக்கிறது.

'மக்கள் பணத்தை தொடமாட்டோம்' என்று வீராவேச மாக பேசுவார்கள். ஆனால் கண்ணுக்குத் தெரியாத இடத்தில் கமிஷன் அடிக்கிறார்கள். இதுதான் த.வெ.க. அரசின் தாரக மந்திரமாக இருக்கிறது.

எந்தத் துறையிலும் அரசுக்கு கிடைக்க வேண்டிய வருவாயை தனியாருக்கு தாரை வார்ப்பதிலேயே தனிக்கவனம் செலுத்துகின்ற அரசாக தமிழக வெற்றிக் கழக அரசு இருக்கிறது.

பொதுவுடமை தோழர்கள் வரவேற்கப் போகின்றார்களா?

இந்த 'டம்மி' அரசாங்கம் விலைவாசி உயர்வை பற்றி கவலைப்படவில்லை. சட்டம் ஒழுங்கு குறித்து கவலைப்படவில்லை. இப்படி எதைப் பற்றியும் கவலைப்படாமல் வரப்போகிற இடைத்தேர்தலுக்கு என்ன செய்து நம்மை காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய பொதுவுடமை தோழர்கள் இன்றைக்கு சிறைத்தறையினுடைய கட்டுப்பாட்டில் இயங்கி வருகிற அந்த பொருட்கள் விற்பனை நிலையங்கள் தனியாருக்கு தாரைவார்க்க படுவதை வரவேற்கப் போகின்றார்களா? அல்லது ஆதரிக்க போகின்றார்களா? அல்லது அனைத்து பிரிசன் பஜார்களும் தனியாருக்கு செல்வதை வரவேற்கப் போகின்றார்களா?

தனியாருடன் லாபி அமைத்து கலெக்சன் கட்டுகிறாரா கரெப்ஷன் குமார்!

கைதிகள் தப்பிச் செல்கிறார்கள் என்ற வாதத்தை சாக்காக வைத்து தனியார்மயமாக்கு கிறார் கலெக்சன் குமார்.

சட்டத்துறையில் ஆடு மேய்ப்பவருக்கு அரசு வழக்கறிஞர் பதவி, மின் சாரத்துறையில் ஒரு யூனிட் மின்சாரம் 41 ரூபாய்க்கு கொள்முதல், இப்பொழுது சிறைத்துறையில் தனியாருடன் லாபி அமைத்து அவர்களிடம் கலெக்சன் போடுகிறாரா என்று மக்கள் கேள்வி கேட்பார்களா இல்லையா?

எதைப்பற்றியும் கவலைப்படாமல் ரீல்ஸ் மூலமாக ஆட்சி நடத்தி விடலாம், ரீல்ஸ் மூலமாக மக்களை ஏமாற்றி விடலாம். பொய்யான வதந்திகளை பரப்பிவிடலாம் அதன் மூலம் மக்களை ஏமாற்றி விடலாம் என்று தொடர்ந்து தப்பு கணக்கு போட்டுக் கொண்டு இந்த அரசு இந்த தமிழக மக்களை வாட்டி வதைத்து கொண்டிருக்கின்றது.

புதுக்கோட்டையில் ஸ்டிக்கர் ஒட்டி விழா!

தலைவர் தளபதி திராவிட மாடல் ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டி இன்றைக்கு விழா நடத்துகிறார்கள். தி.மு.க. ஆட்சியில் கொண்டு வந்த புதிய பேருந்து நிலையம் திறப்புவிழா காண்கிறது என புதுக்கோட்டையில் தி.மு.க.வினர் இனிப்பு வழங்கினால் அதைத் தடுக்கிறார்கள் காவல்துறையினர்.

சந்தி சிரிக்கும் சட்டம் - ஒழுங்கை ஒழுங்குபடுத்த காவல்துறையை பயன்படுத்தாமல், பந்தோபஸ்துக்கும் இனிப்பு வழங்குவதை தடுப்பதற்கும் பயன்படுத்தினால் கொலைகளும் - கொள்ளை களும் பெருகாமல் என்ன செய்யும்?

இடைத்தேர்தலில் தக்க பாடம் புகட்டப்படும்!

முந்தைய ஆட்சியின் திட்டங்களுக்கு துவக்க விழாக்களை நடத்திவிட்டுச் செல்கிற ரீல்ஸ் ஆட்சியாக தான் இந்த த.வெ.க. ஆட்சி இருக்கிறது. வெறும் ரீல்ஸ் மூலமாகவே ஐந்தாண்டு காலத்தையும் ஓட்டிவிடலாம் என்று கருதும் த.வெ.க. ஆட்சிக்கு நிச்சயமாக ஐந்து தொகுதி இடைத்தேர்தலிலும் தக்க பாடத்தை மக்கள் புகட்டுவார்கள்.

இவ்வாறு சட்டத் துறை முன்னாள் அமைச்சர் எஸ். ரகுபதி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

ரூ.5 கோடி பேரம் தொடர்பாக

அமைச்சர் ராஜ்மோகன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்!

லஞ்ச ஒழிப்புத்துறையில் தி.மு.க. சார்பில் கழக சட்டத்துறை இணை செயலாளர் இ.பரந்தாமன் மனு!

சென்னை, நவ.3-

5 கோடி ரூபாய் பேரம் தொடர்பாக அமைச்சர் ராஜ்மோகன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, தி.மு.க. சார்பில் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் எழும்பூரில் நடைபெற்ற தமிழ்நாடு நாள் அரசு விழாவில் பங்கேற்று பேசியபோது தனக்கும், முதலமைச்சருக்கும் இடையே உள்ள அனுபவங்களை சொல்கிறேன் என்று கூறினார். அப்போது, இயல், இசை நாடக மன்றத் தலைவர் பதவியை எனக்கு கொடுக்க சொல்லுங்கள், அதற்காக 5 கோடி ரூபாய் தருகிறேன் என்று கூறியவரை தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் லயோலா மணி தன்னிடம் அழைத்து வந்ததாக மேடையிலேயே பேசியுள்ளார். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் பேசியதை ஆதாரமாக கொண்டு ஊழல் தடுப்பு பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கக்கோரி தி.மு.க சார்பில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குனரிடம் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான இ.பரந்தாமன் புகார் மனு அளித்துள்ளார்.

அவர் அளித்த மனுவின் முக்கிய கோரிக்கைகள் வருமாறு:-

இயக்குநர், லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநரகம், பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(அ) ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவுகள் 8 மற்றும் 12, பாரதிய நியாய சன்ஹிதா, 2023ன் பிரிவு 61 மற்றும் ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 7A ஆகியவற்றின் கீழ் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ய வேண்டும்.



விசாரணையில் வெளிப்படும் தகவல்களின் அடிப்படையில், பள்ளிக்கல்வி மற்றும் தகவல் துறை அமைச்சர் ராஜ்மோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் ஏ.லயோலா மணி, ரூ.5,00,00,000/ வழங்க முன்வந்த அடையாளம் தெரியாத நபர் மற்றும் தொடர்புடைய பிற நபர்கள் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) அமைச்சர் ராஜ்மோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் ஏ.லயோலா மணி ஆகியோரின் வாக்குமூலங்களைப் பதிவு செய்து, லஞ்சம் வழங்க முன்வந்த நபரின் அடையாளம், அந்த முன்மொழிவு செய்யப்பட்ட தேதி, இடம் மற்றும் அதன் தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும்.

(இ) 01.11.2026 அன்று வெளியிடப்பட்ட அமைச்சரின் உரையின் அசல் மற்றும் திருத்தப்படாத காணொளிப் பதிவை, தகவல் மற்றும் மக்கள் தொடர்புத் துறையிடமிருந்தும், அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஊடக நிறுவனங்களிடமிருந்தும், பாரதிய சாக்ஷ்ய அதிநியம், 2023ன் பிரிவு 63ன் கீழ் தேவையான சான்றிதழுடன் கைப்பற்றிப் பாதுகாக்க வேண்டும்.

(ஈ) லஞ்சம் வழங்க முன்வந்த நபர், ஏ.லயோலா மணி, அமைச்சர் திரு. ராஜ்மோகன் மற்றும் சம்பந்தப்பட்ட பிற இடைத்தரகர்கள் ஆகியோருக்கு இடையிலான தொலைபேசி அழைப்பு விவரங்கள், குறுஞ்செய்திகள் மற்றும் பிற மின்னணு தகவல்களைப் பெற வேண்டும்.

(உ) சம்பந்தப்பட்ட நபர்களின் பதவி அல்லது அரசியல் செல்வாக்கால் பாதிக்கப்படாமல், நேர்மையான, பாரபட்சமற்ற மற்றும் காலக்கெடுவுக்குள் விசாரணையை நடத்த வேண்டும்.

(ஊ) இந்தப் புகாரைப் பெற்றதற்கான ஒப்புகையையும், பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, 2023ன் பிரிவு 173(2)ன் கீழ் பதிவு செய்யப்படும் முதல் தகவல் அறிக்கையின் நகலையும் புகார்தாரருக்கு வழங்க வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை மூலக்கடையில் நடைபெற்ற,பெரம்பூர் தெற்குப் பகுதி 44 ஆவது வட்டக் கழகச் செயலாளர்,சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம் ஆ.இராசலட்சுமி இணையரின் மகள் ஆ.தமிழ்பொன்னி – கு.விக்னேஷ் ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழகத் துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். உடன் கழகத் தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் ஈரோடு இறைவன், சேலம் வடிவேல், எம்.டி.சி.(தொ.மு.ச.) எம்.சுந்தரமூர்த்தி, ஜே.அரிதாஸ், ஆ.சிங்காரவேல், சித்தார்தன், நடராஜன், வெற்றி காந்தி, பகுதிப் பிரதிநிதி ப.பிரதீப், தொ.மு.ச. மற்றும் பலர் உள்ளனர்.